# அக்குபங்சர்:
# ஒரு வாழ்க்கை அறிவியல்

தொகுப்பு :
**Healer. அ. உமர் பாரூக் M.Acu., FRHS,**

முதற்பதிப்பு : 2002
17 -ஆம் பதிப்பு : 4 - 2009 (81,000 படிகள்)
நன்றி :
ஹெல்த் டைம் மாத இதழ்,
டாக்டர். பஸ்லுர் ரஹ்மான் MBBS, DV, MD, PhD,
விலை ரூ. 10/-

**வெளியிடுவோர் :**
மரபுமுறை அக்குபங்சர் கவுன்சில்
( அக்குபங்சரின் தனித்தன்மையை பிரச்சாரம் செய்வதற்கான அமைப்பு )
33 A, கிராமச் சாவடித் தெரு, கம்பம் - 625516.
இணையதளம்: *www.acuhome.org*
மின் அஞ்சல் : drumarfarook@gmail.com

### ❖ அக்குபங்சர் சிகிச்சை என்றால் என்ன?

அக்குபங்சர் என்பது மயிரிழையைக் காட்டிலும் மிக மெல்லிய ஊசி அல்லது கை விரல்கள் மூலம் தோலின் மேல்பகுதியில் தொடுவதன் மூலம் உடலில் ஏற்பட்டுள்ள நோய்களைக் களையக் கூடிய மருத்துவ முறையாகும். இம்முறை எட்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீனாவில் பயன்படுத்தப்பட்டு வந்ததுள்ளது.

நம் உடலின் உள் உறுப்புகளின் சக்தி ஓட்டப்பாதையில் உள்ள தேக்கம் அல்லது குறைபாடே நோயாகும். அக்குபங்சர் நாடிப் பரிசோதனை மூலம் சக்தி ஓட்ட குறைபாட்டின் மையத்தை அறிந்து, அதனை சரி செய்யக் கூடிய அக்குபங்சர் புள்ளியினை தொடுவதன் மூலம் நோய் களையப்படுகிறது.

### ❖ அக்குபங்சர் முறையில் உடலில் நிறைய ஊசிகளைச் செருகி, அவற்றில் மின்சாரம் செலுத்தப்படும் என்று கூறுகிறார்களே?

அக்குபங்சர் சிகிச்சை என்பது ஒன்றிரண்டு புள்ளிகளில் ஊசியாலோ அல்லது கையாலோ தொட்டு சிகிச்சையளிப்பது மட்டும் தான். இன்னும் சொல்வதானால், வெறும் கையால் தொட்டு சிகிச்சையளிப்பது தான் உண்மையான அக்குபங்சர். ஏனென்றால், அக்குபங்சரின் துவக்க காலத்தில் ஊசி போன்ற உலோகங்களே கண்டுபிடிக்கப்படவில்லை.

அக்குபங்சர் சீனாவில் இருந்து பிற நாடுகளுக்குப் பரவிய போது, அந்தந்த பகுதிகளின் தன்மைக்கேற்ப மாறுதல்கள் உருவாயின. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளில் இம்முறை பரவிய பின்பு வணிகமயமாக்கப்பட்டது. நோயாளியிடம் பணம் பறிக்க என்னென்ன வழிகள் உண்டோ அத்தனையும் பின்பற்றப்பட்டது. அதன் விளைவுகள் தான் - மின்தூண்டல் சாதனங்கள் (Electrical Stimulators), சக்தி அளவு பரிசோதனைக் கருவி *(Computer Meridian Diagnosis)*, துணை உணவுகள் *(Supplimentary Foods)* எனும் மருந்துகள், இரத்த

ஒட்டத்தை சீரமைக்கும் கருவி *(Blood Circulative Massagers)*போன்றவை விற்பனைக்கு வந்துள்ளன.

இவற்றுக்கும் அக்குபங்சருக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை.

- **தினம் தினம் சிகிச்சை செய்வீர்களா?**

தேவையில்லை. 7 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை சிகிச்சை செய்வது நோயிலிருந்து விரைவாக குணமடைய வழி வகுக்கும்.

- **கண்டிப்பாக 7 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை அவசியம் தவறாமல் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டுமா? ஏதேனும் சந்தர்ப்பத்தால் ஒருமுறை அல்லது இருமுறை சிகிச்சை எடுத்துக் கொள்ள தவறிவிட்டால் நோயிலிருந்து பலன் பெற முடியாமல் போய்விடுமா?**

ஒவ்வொருமுறை செய்யப்படும் சிகிச்சையும் நீங்கள் நோயிலிருந்து விடுபட வழிவகுக்கிறது. ஓரிருமுறை சந்தர்ப்ப

சூழ்நிலையில் சிகிச்சை தவறிவிடுவதால் ஏற்கனவே பார்த்த சிகிச்சையின் பலன் குறைந்துவிடாது. விடுபட்டுவிட்ட சிகிச்சையிலிருந்து தொடர்ந்து சிகிச்சை செய்து கொள்ளலாம்.

- **சுமார் எத்தனை நாளில் குணம் தெரியும்?**

சிலருக்கு ஆரம்பித்த முதல் நாளிலிருந்தே குணம் தெரிய ஆரம்பிக்கும். சிலருக்கு நான்கு, ஐந்து வாரங்கள் கழித்து திடீரென மாறுதல்கள் தெரிய ஆரம்பிக்கும்.

- **ஒருமுறை சிகிச்சை செய்தால் அது எத்தனை நாட்களுக்கு வேலை செய்யும்?**

உடலில் உள்ள நோய்களுக்கு ஏற்றவாறு ஒருமுறை சிகிச்சை செய்வதன் மூலம் பூரணகுணம் அடைபவர்களும் உண்டு. ஒரு சிலருக்கு உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு அத்துடன் நின்றுவிடும். மேலும் முன்னேற்றம் இல்லாத நிலையில் அடுத்த சிகிச்சையை தொடர்வது நல்லது.

- **ஒரு நோய்க்கு அக்குபங்சர் முறையில் சிகிச்சை முடிய எத்தனை நாட்களாகும்?**

ஓரிரு சிகிச்சைக்கு பிறகு நோயின் தீவிரத்திலிருந்து நீங்கள் விடுபடுவதை உணருவீர்கள். தொடர்ந்து உடல் தொந்தரவுகள் சீராகும் வரை சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லா நோயாளிகளின் உடலும் ஒரே மாதிரியாக இருக்காது. அவரவர் உடலின் தன்மையைப் பொறுத்து, சிகிச்சைக்கான காலம் மாறுபடும். நோயிலிருந்து குணமடைவது நிச்சயம்.

- **உங்களிடம் வருவதற்கு முன்பாக ஆங்கில மருத்துவ முறையில் நிறைய டெஸ்டுகள் எடுத்துள்ளோம். அதன் ரிப்போர்ட்டுகள் பயன்படுமா?**

கண்டிப்பாக பயன்படாது. அக்குபங்சர் சிகிச்சைக்கு அது தேவையே இல்லை. மனித உடலில் சக்தி மாற்றங்கள் ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாக வேதி மாற்றங்கள் ஏற்படுகின்றன. டெஸ்ட்டுகளின் மூலம் அறிந்து

கொள்வது எல்லாமே இந்த வேதி மாற்றங்களைத்தான். மாறிக் கொண்டேயிருக்கும் வேதி மாற்றங்களை நாம் தெரிந்து கொண்டு - சக்தி மாற்றத்தை அறியவோ, சீர்படுத்தவோ முடியாது. பல லட்ச ரூபாய் செலவு செய்து உச்சி முதல் உள்ளங்கால் வரை ஆயிரக்கணக்கான டெஸ்டுகள் செய்தாலும் அவற்றில் எதுவுமே சிகிச்சைக்கு உதவாது.

- **டெஸ்ட்டுகள் இல்லாமல் நோய் குணமாகிவிட்டது என்பதை எப்படி அறிந்து கொள்வது?**

ரொம்பவும் சுலபம். நோயாளி சில கஷ்டங்களைக் கூறுகிறார். கஷ்டங்களும் தொந்தரவுகளும் குறையும் போது இப்பொழுது தேவலாம் என்று கூறப் போகிறார். இதற்கு மேல் டெஸ்ட்டுகளுக்கும், பரிசோதனைகளுக்கும் அவசியமே இல்லை. ஒரு நோயாளியின் மூளையை மட்டுமே நூற்றுக்கு நூறு நம்ப முடியும். அது என்ன கூறுகிறதோ அதுதான்

உண்மை. பரிசோதனைக் கருவிகளையும், டெஸ்ட்டுகளையும் ஒரு நோயாளியின் மூளைக்கு ஈடாக கருத முடியாது.

- **சில சிகிச்சை முறைகளில் நோய் அதிகமாகி பிறகு குறையும் என்கிறார்களே? இந்த சிகிச்சைக்கும் அப்படி ஏதாவது உண்டா?**

ஒரு சிலருக்கு அப்படி ஏற்படலாம். அது நல்ல மாற்றம் தான். உதாரணத்திற்கு ஒருவருக்கு நுரையீரலில் சளி அதிகமாகி இருமல் வருகிறது. இதில் சளி தான் நோய். இருமல் என்பது சளியை வெளியேற்றும் உடலின் முயற்சி. சிகிச்சையின் போது சிலருக்கு இருமல் அதிகரித்து சளி வெளியேறும். அப்படி வெளியேறுவது மட்டும் தான் குணமடைய ஒரே வழி. உடலில் உருவாகும் சளி, உடலிலிருந்து பிற வழிகளில் உருமாற்றம் பெற்று வெளியேற முடியாத போது இருமல் அதிகரிக்கத்தான் செய்யும். இது நன்மையான மாற்றம் தானே.

உங்களிடம் வருவதற்குமுன் எல்லோரும் மாத்திரை மருந்துகள் சாப்பிட்டு வருபவர்கள்தாம். அக்குபங்சர் சிகிச்சை தொடங்கிய பிறகும் மாத்திரைகளை தொடர்ந்து எடுத்துக் கொள்ளலாமா?

மருந்து, மாத்திரைகளை அவசியம் நிறுத்திவிடுவது தான் மிகவும் நல்லது மருந்து, மாத்திரைகள் நோயின் தொந்தரவுகளையும் நம் மூளையையும், நரம்பு மண்டலத்தையும் எட்டாதவாறு செய்கின்றன. மற்றபடி நோயைக் குறைப்பதில்லை. நோயானது அதன் போக்கில் வளார்ந்து கொண்டுதான் போகிறது. எனவே மாத்திரைகளை நிறுத்தி விடுவதனால் எந்த பாதகமும் இல்லை. நன்மையே. உண்மையான நோயின் தன்மையையாவது உணர்ந்து கொள்ள முடியும்.

- **6 அல்லது 8 முறைக்குமேல் சிகிச்சை மேற்கொண்ட பிறகும் உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் தெரியவில்லை என்று கூறுபவர்களுக்கு இந்த முறை**

**வேலை செய்யவில்லை அல்லது வேலை செய்கிறது என கருதலாமா?**

மிகச் சிலருக்கே இந்த நிலை ஏற்படுகிறது. உடலில் சக்தி நிலை (நோய் எதிர்ப்பு சக்தி) மிகக்குறைவாக இருப்பவர்களுக்கு சிகிச்சை பிடிபட சில மாதங்கள் ஆகிவிடுகின்றன. நிச்சயமாக அக்குபங்சர் இவர்களுக்கு வேலை செய்யும். அவர்களை அறியாமலே திடீரென்று நோய்களிலிருந்து விடுதலை பெறுவார்கள்.

- **அக்குபங்சர் சிகிச்சையின் போது கடைபிடிக்க வேண்டிய பத்தியங்கள் ஏதேனும் உண்டா?**

பத்தியங்கள் என்று எதுவும் கிடையாது.

- **குறிப்பாக எந்த வயதினர் இந்த சிகிச்சையினால் பலன் பெற முடியும்?**

பிறந்த குழந்தை முதல், முதியோர் வரையில் எந்த வயதினருக்கும் இந்த சிகிச்சை முழுமையாக பலனளிக்கும்.

பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் சிசிச்சை செய்து கொள்ளலாமா?

தாராளமாக செய்து கொள்ளலாம். மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அனைத்து விதமான வலிகளிலிருந்து குணமடைய சிகிச்சை உதவும்.

- **அக்குபங்சர் சிசிச்சை மேற்கொண்டிருக்கும் போது திடீரென்று காய்ச்சல், தலைவலி என்று ஏதேனும் வந்தால் மாத்திரை மருந்துகள் ஏதாவது எடுத்துக் கொள்ளலாமா?**

தேவையே இல்லை. நம் உடலில் உண்டாகும் கழிவுகள் சரிவர வெளியேற்றப்படாமல் உடலில் தங்குவதே நோயாகும். அக்குபங்சர் சிகிச்சை மேற்கொள்ளும் பொழுது நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி (Energy Force) பலம் அடைந்து கழிவுகள் நீங்கும் பொழுது காய்ச்சல், தலைவலி போன்ற கஷ்டங்கள் உண்டாகும். அவ்வாறு உண்டானால் சிகிச்சைமுறை நன்கு வேலை

செய்கின்றது என்று அர்த்தம். எனவே காய்ச்சல், தலைவலி, வாந்தி, வயிற்றுப்போக்கு ஏதேனும் ஏற்பட்டால் அந்த கஷ்டம் தீரும் வரை உணவு ஏதும் உண்ணாமல் இருக்க வேண்டும் அந்த கஷ்டங்கள் தானே குறைந்து விடும்.

- **எந்த விதமான நோய்களை அக்குபங்சர் முறையில் குணப்படுத்தலாம்?**

அக்குபங்சர் சித்தாந்தத்தின்படி குணப்படுத்த முடியாத நோய் என்று ஒன்று கிடையாது, அக்குபங்சர் சிகிச்சையில் அதற்கான சாத்தியக்கூறுகள் முழுமையாக உள்ளன.

கண்கள் சம்பந்தமான நோய்கள், இருதயம் சம்பந்தமான நோய்கள், தலைவலி, சிறுநீரகக் கோளாறுகள், சளி, சைனஸ், நுரையீரல் சம்பந்தமான நோய்கள், வாய்வு, வயிற்றில் புண், குடல் பூச்சிகள் போன்ற வியாதிகள், இன்னும் என்ன என்ன வியாதிகள் உண்டோ அத்தனைக்கும் அக்குபங்சர்

மருத்துவத்தில் குணப்படுத்துவதற்கு வழி இருக்கிறது.

- **நோயாளி ஒருவருக்கு 10 குறைகள் உள்ளன ஆனால் அவர் 5 ஐ மட்டும் கூறுகிறார். அவர் சொல்ல மறந்த உபாதைகளும் குணமாகுமா?**

அக்குபங்சர் நாடிப்பரிசோதனையின் சிறப்பு அம்சமே இதுதான். நோயாளி கூறும் தொந்தரவுகள் - கூறாத தொந்தரவுகள் அனைத்துமே ஒரே நோயின் அறிகுறிகள் தான் . நோயின் மூலத்தை, மையம் கொண்டுள்ள உறுப்பை நாடிப் பரிசோதனை மூலம் அறிந்து சிகிச்சை அளிக்கும் போது உடலில் தோன்றிய அனைத்து விதமான தொந்தரவுகளும் தானே மறைந்து விடும்.

- **இந்த சிசிச்சையின் சிறப்பம்சம் என்ன?**

ஒருவர் கூறும் கஷ்டங்களை வைத்தே நோயின் தன்மையை ஓரளவு அறிந்துகொள்ள முடியும். சிறிய தொந்தரவோ, பெரிய

கஷ்டங்க¼ளா அவ்வளவுக்கும் அக்குபங்சர் முறையில் தெளிவான அர்த்தம் உண்டு.

உதாரணமாக ஒருவனைப்பார்த்து, ‘அவன் படுசோம்பேறி ’ என்று யாரேனும் கூறினால் அதற்கு அர்த்தம், யார் திட்டினாலும், அடித்தாலும் அவன் சோம்பேறியாகத்தான் இருக்க விரும்புகிறான் என்பதல்ல, அவன் உழைக்க ஆசைப்பட்டாலும் அவன் உடம்பில் உள்ள சக்தியின்மை அவனை உழைக்கவிடாமல் செய்கிறது.

அக்குபங்சர், சக்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கும் ஒரு சிகிச்சை முறை. உடலில் சக்தி நிலையில் மாற்றங்கள் ஏற்படும்போது தான் நோய் உருவாக ஆரம்பிக்கிறது. நோயில் இந்த ஆரம்ப நிலையில் ஏற்படும் தொந்தரவுகளை இங்கே பார்ப்போம்.

1. அதிகப்படியான தூக்கம்.

2. தூக்கத்தின் போது அடிக்கடி கனவுகள்.

3. தூங்கி எழும்போது சுறுசுறுப்பின்மை.

4. தூங்கும் உணர்வு இருக்கும் ஆனால் தூக்கம் வராது.

5. இரவில் விழித்துவிட்டால் திரும்ப தூக்கம் வராது.

6. தூங்கி எழுந்ததும் தலைவலி.

7. பசியின்மை.

8. அடிக்கடி பசி எடுத்துக் கொண்டே இருக்கும்.

9. சாப்பிட்டதும் வயிறு அடைத்தது போன்றிருத்தல்.

10. சாப்பிட்டதும் மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு.

11. சாப்பிட்டதும் தூக்கம் வருதல்.

போன்ற இவை ஆரம்ப கால நோயின் அறிகுறிகள். இவை இன்றே தீர்க்கப்பட வேண்டும். இல்லையயனில் 5 அல்லது 10

வருடங்களில் குறிப்பிட்ட நோயானது வளர்ந்து விடக்கூடும்.

அக்குபங்சர் முறையின் சிறப்பம்சம் என்னவெனில் நோயின் ஆரம்ப நிலையிலேயே அதனைக் களைந்துவிட முடியும். நோய் முற்றிவிட்ட நிலையிலும் வேரோடு குணப்படுத்த முடியும். இது ஒரு முழுமையான சிகிச்சைமுறை.

- **அக்குபங்சரில் மன நோய்களைக் குணப்படுத்த முடியுமா?**

கண்டிப்பாக குணப்படுத்த முடியும். ஏனெனில், மனநோய்கள் மூளை சம்பந்தப்பட்டதல்ல. உள்ளுறுப்புக்களின் சீரற்ற இயக்கமே மூளையில் பிரதிபலிக்கிறது.

நன்றாக பசித்திருக்கும் ஒருவருக்கு துயரமான செய்தி ஒன்று சொல்லப்படுகிறது. உடனே பசி அடங்கி விடுகிறது. மற்ற உறுப்புகளான இருதயம், நுரையீரல், சிறுநீரகம் போன்ற அனைத்து உறுப்புகளும் வேலை

செய்த வண்ணம் இருக்கும் போது வயிற்றின் இயக்கம் மட்டும் முழுமையாக அடங்கிவிடுகிறது. அதாவது துக்கம், கவலை போன்ற மனக்கஷ்டம் வயிற்றின் இயக்கக்குறைவினால் வருகிறது.

இதைப்போன்றே துக்கம் நெஞ்சை அடைக்கும். தேம்பி தேம்பி அழும்போது நெஞ்சு குலுங்கும். மூச்சுவிட முடியாது. குழந்தைகள் அழும் போது கேவி கேவி அழுவார்கள். எனவே, துக்கமும் அதிகமாகி அழக்கூடிய மனோபாவமும் நுரையீரலின் பலவீனத்தால் ஏற்படுகிறது. சிறுவர்களைப் பயமுறுத்தினால் சிறுநீர் கழித்துவிடுவார்கள். பயம் சிறுநீரகத்தின் செயல் குறைவினால் ஏற்படக்கூடியது.

குடிப்பழக்கம், கல்லீரலைக் கெடுக்கிறது. குடிபோதையில் இருக்கும் ஒருவரை எளிதில் கோபம் உண்டாக்கிவிட முடியும். கோப மனப்பான்மை கல்லீரல் பாதிப்பினால் ஏற்படுகிறது, இவ்வாறு ஒருவரின் மனநிலையை வைத்தே அவருடைய நோயின்

இருப்பிடத்தை அறிய முடியும். அந்த உறுப்புக்குத் தேவையான சக்தியை அறிந்து மீண்டும் பாதிப்புக்குள்ளான உறுப்பைப் பழைய நிலையில் இயங்க வைப்பதன் மூலம் மனக் கஷ்டங்களை குணப்படுத்த முடியும், மனநோய்கள் மூளை சம்பந்தப்பட்டதல்ல.

உடல் உறுப்புகளில் சக்தி குறையும்போது மனநிலையில் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதுவே ஒரு நோயின் ஆரம்பநிலை. இந்த நிலையிலேயே பிற்காலத்தில் ஒரு உறுப்பில் ஏற்படக்கூடிய நோயை இன்றே தவிர்த்துவிட முடியும்.

இது அக்குபங்சர் மருத்துவத்தின் இன்னுமொரு சிறப்பம்சம்.

- **ஆங்கில மருத்துவம் விஞ்ஞான ரீதியாக வெகுவேகமாக முன்னேறி வருவதாகக் கூறப்படுகிறது. உங்கள் கருத்து என்ன?**

இதற்குப் பதிலாக ஒரு சிறிய உதாரணத்தை மட்டும் கூறினால் போதுமானது. நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

ஒரு குறிப்பிட்ட நோயைக் குணப்படுத்த முன்பு 10 நாட்கள் தேவைப்பட்டன. இன்று இரண்டு நாட்களில் குணப்படுத்த முடிகிறதென்றால் அது முன்னேற்றம். இப்போது முன்பைக் காட்டிலும் குறைவான அளவே மருந்து, மாத்திரைகள் தேவைப்படுகின்றன என்றால், அது முன்னேற்றம். முன்பெல்லாம் ஒரு நோயைக் கண்டுபிடிக்க நிறைய டெஸ்ட்டுகள் பரிசோதனைகள் எல்லாம் தேவைப்பட்டன. இப்போது இந்தத் தேவைகள் எல்லாம் குறைந்துவிட்டன என்றால் அது அறிவுப்பூர்வமான முன்னேற்றம். முன்பு மருந்து மாத்திரைகளுக்கு பக்கவிளைவுகள் ஏற்றப்பட்டன. இன்று அந்த குறைகள் நீக்கப்பட்டுவிட்டன என்றால் அது விஞ்ஞான பூர்வமான முன்னேற்றம் என நாம் ஏற்றுக் கொள்ளலாம்.

ஆனால் கண்கூடாக பார்க்கும் இன்றுள்ள நிலை நேர்மாறானது.

- **அக்குபங்சர் நாடிப்பரிசோதனையில் நீங்கள் நோயின் தன்மையினை எப்படி அறிந்து கொள்கிறீர்கள்?**

நமது உடலில் முக்கியமான உறுப்புகள் 12 உள்ளன. அவையாவன: வயிறு, மண்ணீரல், கல்லீரல், சிறுநீரகம், சிறுநீர்ப்பை, சிறுகுடல், நுரையீரல், பெருங்குடல், பெரிகார்டியம் , *(Pericardium)* இருதயம், பித்தப்பை, தேக வெப்ப கட்டுப்பாட்டு உறுப்பு போன்றவை.

இவை ஒவ்வொன்றிலும் அவற்றின் இயக்கத்திற்குத் தேவையான சக்தி (சிஹிசியூறூாக்ஷு) இருக்கிறதா? இல்லையா? எந்த உறுப்புக்குச் சக்தியானது குறைந்து செல்லுகிறது? அதைச் சீர்செய்ய என்ன செய்ய வேண்டும் என்ற முழு விபரத்தையும் அறிந்த கொள்ளமுடியும். அதுவும் ஒரிரு நிமிடங்களில்! இந்த நாடிப்பரிசோதனையின் அடிப்படையில் தான் உடலில் 'சக்தி ஓட்டத்தை' சீர்படுத்தி

நோயின் தன்மைகளைக் களைகிறது அக்குபங்சர் சிகிச்சைமுறை.

- **நோய் என்றால் என்ன? கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்களேன்?**

நம் உடல் தன்னைத் தானே சீரமைத்துக் கொள்ளும் ஆற்றலுடையது. தட்ப வெப்பம் போன்ற இயற்கையான காரணங்களால் ஏற்படும் சின்னச் சின்ன உடல் மாற்றங்களை நாம் உணரும் முன்பே தானே சரியாக்கி விடுகிறது.

இயற்கை விதிகளை மீறுதலே நோய்க்கான முதற்காரணமாகும். பசியோடு சாப்பிடாமல் இருப்பதும், பசியின்றி சாப்பிடுவதும், அளவுக்கதிமாக சாப்பிடுவதும், ஓய்வு எடுக்க வேண்டிய நேரத்தில் உழைப்பதும், அதிகப்படியான தூக்கமும், முறையற்ற உணவும் இயற்கை விதிகளை மீறுவதாகும். இத்துடன் புகை, மது போன்ற தீய பழக்கங்கள் சேர்ந்து நோயை வளர்க்கின்றன. மேற்கண்ட காரணங்களால் உடல்

உள்ளுறுப்புகளில் கழிவுகள் தேக்கம் கொள்கின்றன. இது நோயின் முதற்கட்டமாகும்.

தேங்கிய கழிவுகள் தானே வெளியேற முயலும். இந்த உடல் மாற்றத்திற்கு நாம் ஒத்துழைக்காமல் தொடர்ந்து இயற்கைக்கு மாறான பழக்க வழக்கங்களை தொடர்வோமானால் தேங்கிய கழிவுகள் பெருக்கமடைந்து - அது சார்ந்துள்ள உறுப்பை பாதிக்கத் தொடங்கும். இது நோயின் இரண்டாவது கட்டமாகும். இந்நிலையில் தான் நாம் உடல் ரீதியான தொந்தரவுகளை உணருகிறோம்.

இதற்குப் பின்பு முறையற்ற உணவுகளினாலும், பழக்கங்களினாலும் நோய் முற்றிய நிலையில் உள்ளுறுப்புக்களை சேதமடையச் செய்கிறது. இதன்பின்பு இரசாயன மருந்து மாத்திரைகளை உட்கொண்டோமானால் உறுப்புக்கள் மேலும் மோசமடைகிறது. இந்த நிலையில் தான் ஆங்கில மருத்துவத்தில் ஸ்கேன், எக்ஸ்ரே

போன்ற கருவிகளால் நோயின் பாதிப்பை கண்டுபிடித்து அறுவை சிகிச்சை மூலம் பாதிக்கப்பட்ட உறுப்பை வெட்டியயடுக்கிறார்கள். ஆனாலும் நோய் குணமாவதில்லை. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்படும் புதிய உறுப்பிலும் உடலில் தேங்கி உள்ள கழிவுகள் சேர்ந்து அதனையும் பாதிக்கிறது.

நோய் வெளிப்படும் உறுப்புகளை மாற்றுவதும், வெட்டியயடுப்பதும் நிரந்தர தீர்வாகாது. உடலில் உள்ள கழிவுகளை முழுவதும் வெளியேற்றுவது மட்டுமே நோய்க்கான நிரந்தர தீர்வாகும்.

- பரம்பரை வியாதிகளை நீக்கும் சாத்தியக்கூறுகள் அக்குபங்சர் சிகிச்சையில் உள்ளதா?

ஜனன உறுப்புக்களின் வளர்ச்சிக்கும், இனவிருத்தி நல்லமுறையில் ஏற்படுவதற்கும் சிறுநீரகம் என்னும் உறுப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. கர்ப்ப காலத்தில் தாயின்

இயற்கைக்கு மாறான செயல்கள் சிறுநீரகத்தை பலவீனப்படுத்துகிறது. இரசாயன மருந்துகள், செயற்கை உணவுகள் ஆகியவற்றை கர்ப்ப காலத்தில் எடுத்துக் கொள்ளும் போது சிறுநீரகத்தை மேலும் பாதிக்கிறது.

இந்நிலையில் தான் பிறவியிலேயே பலவீனமான உறுப்புக்கள் குழந்தைக்கு கர்ப்பத்தில் தோன்றுகின்றன. இவ்வுறுப்புக்களின் இயக்கக் குறைவுதான் பிற்காலத்தில் பரம்பரை வியாதிகளாக மாறுகின்றன. கர்ப்ப கால தொந்தரவுகளுக்கு முழுமையான அக்குபங்சர் சிகிச்சை எடுத்துக் கொள்வதன் மூலம் பிறவி நோய்கள் தோன்றாமல் களையலாம். சுகமான குழந்தைப் பேற்றுக்கும் வழி வகுக்கும்.

- **B.P யை (இரத்தக் கொதிப்பு) அக்குபங்சரால் குணப்படுத்த முடியுமா?**

B.P யை மிகவும் சுலபமாக குணப்படுத்திவிடலாம். காரணம் B.P யை. என்பது ஒரு நோயே அல்ல. உடல்

உறுப்புக்களில் ஏதேனும் ஒரு உறுப்பில் சேதம் ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்ய இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. 'இருதய இயக்கமும்' *(Heart Rate)* இரத்த அழுத்தமும் (B.P) அதிகரிக்காமல் இது சாத்தியமில்லை. அதிக 'இரத்த அழுத்தம்' (இரத்தக் கொதிப்பு) என்பது உடல் உறுப்புக்களில் ஏதோ ஒன்றில் சேதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத்தான் நமக்கு அறிவுறுத்துகிறது.

அந்த உறுப்பை நாடிப் பரிசோதனையின் மூலம் துல்லியமாக அறியமுடியும். அதற்கு தேவையான சக்தியை அளிப்பதன் மூலம் அதிக இரத்த ஓட்டத்திற்கு அவசியமில்லாமல் செய்து விடலாம். இருதய இயக்கமும், இரத்த அழுத்தமும் தானாகவே சீரான நிலைக்கு வந்துவிடும்.

உதாரணமாக, சிறுநீரகத்தில் ஒரு பாதிப்பு ஏற்பட்டால் கை, கால்கள், மூக்கு வீங்குகிறது. இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. வயிற்றில்

வாயுத் தொல்லைகள் மிகுதியாகும் போது ய.P. யும் ஏற்படுகிறது.

அளவுக்கதிகமான குடியினால் கல்லீரல் கெடும் போது, B.P யும் தலைதூக்குகிறது.

ஆக B.P என்பது ' இருதய நோய் அல்ல.' உடலில் ஏதோ ஒரு உறுப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்பு நீங்கும் வரையில் அதிக இரத்த ஓட்டம் (இரத்தக் கொதிப்பு) அந்த உறுப்பினுள் நடைபெற்றாக வேண்டும் இது அவசியம்.

இதற்கு நேர்மாறாக ஆங்கில மருத்துவம் B.P யை ஒரு இருதயம் சம்பந்தமான நோயாகவே கருதுகிறது. இயற்கையான போக்குக்கு மாறாக இந்த இரத்த ஓட்டத்தைக் குறைக்கவும், இருதய இயக்கத்தை குறைக்கவும் படாதபாடுபடுகிறது. இதன் காரணமாக மருந்து, மாத்திரைகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதே இரத்த அழுத்தம் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆங்கில மருத்துவத்தின் இந்த

செயல் பழுதடைந்துவரும் ஒரு உறுப்பில் மேலும் பாதிப்பினை அதிகப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குமேல் அதிகமாக இயங்கிக் கொண்டிருக்கும் இருதயமும் சோர்வடைய வழிவகுக்கிறது.

"ஒரு நோயை குணப்படுத்த முடியாவிட்டாலும் பரவாயில்லை. வைத்தியத்தின் மூலம் மேலும் மேலும் மோசமாக்கிவிடாதீர்கள்." என்பது "நவீன மருத்துவத்தின் தந்தை என்றழைக்கப்படும்" ஹிப்போக்ரேட்டிஸ் *(Hippocrates)* நமக்கு கூறும் அறிவுரைகளில் மிக முக்கியமானதாகும். ஆங்கில மருத்துவம் செயல்முறையில் அறியாமலேயே பெருந்தவறிழைத்துக் கொண்டிருக்கிறது.

- **அக்குபங்சர் சிகிச்சை மூலம் சர்க்கரை நோய் ( நீரிழிவு) நோய் குணமாகுமா?**

முதலில் சர்க்கரை நோய் என்றால் என்ன என்பதை தெரிந்து கொண்டால் தான் - அதற்கு

சிகிச்சை உண்டு என்பதையும் புரிந்து கொள்ள முடியும்.

நவீன மருத்துவம் சர்க்கரை நோய்க்கான அடிப்படைக் காரணம் - கணையத்திலிருந்து சுரக்கும் இன்சுலின் பற்றாக்குறைதான் என்று கூறுகிறது. இவ்வளவு நாளாக முறையாக இருந்த இன்சுலின் சுரப்பு திடீரென குறைய என்ன காரணம்? அதுவும் நம் உடல் முழுவதும் பலவகையான சுரப்புக்கள் ஒழுங்காக இருக்கும் போது இந்த ஒரே ஒரு சுரப்பு மட்டும் ஏன் திடீரென குறைகிறது? முன்பு லட்சத்தில் ஒருவருக்கு வந்து கொண்டிருந்த சர்க்கரை நோய் இப்போது உலகையே பயமுறுத்தும் ஆட்கொல்லி நோயாக எப்படி மாறியது? இந்த கேள்விகளுக்கெல்லாம் நவீன மருத்துவத்தின் ஒரே பதில் - இன்னும் ஆராய்ச்சி முடியவில்லை என்பது மட்டும் தான்.

சர்க்கரை நோய்க்கான அடிப்படை காரணத்தையும், அதற்கான சிகிச்சையையும் மிக எளிதாக முன் வைக்கிறது அக்குபங்சர்.

நம் முறையற்ற உணவுப் பழக்கம் மற்றும் ஜீரண உறுப்புக்களின் இயக்கக் குறைவு காரணமாக, செரிமானத்தின் இறுதி எரிபொருளான குளுக்கோஸ் தரம் குறைந்ததாக கிடைக்கிறது. எப்படி கொழுப்பில் தரம் குறைந்த, தரம் கூடிய வகைகள் உள்ளனவோ அதே போல குளுக்கோஸிலும் இருவகைகள் உள்ளன. இப்படி செரிமானம் மூலம் கிடைக்கக் கூடிய குளுக்கோஸின் தரம் தான் இன்சுலின் சுரப்பின் அளவை தீர்மானிக்கிறது. பாதிஅளவே தரம் உள்ள குளுக்கோஸ் செரிமானத்தில் கிடைக்குமானால் வழக்கமாக சுரக்கும் இன்சுலின் அளவு பாதியாக குறையும். தரம் குறைந்த குளுக்கோஸ் தொடர்ந்து உற்பத்தியாகுமானால் இன்சுலின் அளவு குறைந்து கொண்டே போகும். தரம் குறைந்த குளுக்கோஸ் இரத்தத்திலிருந்து

சிறுநீராக பிரிக்கப்பட்டு வெளியேற்றப்படுகிறது. அதிகப்படியான தரம் குறைந்த குளுக்கோஸ் உருவாகும் போது அதிகப்படியான சிறுநீர் வெளியேறும். இந்த நிலையில் அதிகமான பசியும், உடல் மெலிவும் ஏற்படும். உடலில் இருந்து சிறுநீராக வெளியேறும் தரம் குறைந்த குளுக்கோஸை செயற்கையாக மருந்து மாத்திரை மூலம் உடலிலேயே அடக்கி வைக்க முயன்றால் சிறுநீரகம் படிப்படியாக செயலிழக்கும்.

சர்க்கரை நோய்க்கு அடிப்படைக் காரணமே இரத்தத்தில் உள்ள தரம் குறைந்த குளுக்கோஸின் பெருக்கம் தான். இதை அக்குபங்சர் சிகிச்சை மூலம் கட்டுப்படுத்தி, சீர் செய்தால் தரம் குறைந்த குளுக்கோஸ் சிறுநீர் மூலம் முழுமையாக வெளியேறும். உடலிற்கு தேவையான தரம் உயர்ந்த குளுக்கோஸ் கிடைக்கும். இன்சுலின் சுரப்பு தானாகவே அதிகரித்து உடல் நலம் திரும்பி விடும்.

- **சர்ஜரி (அறுவை சிகிச்சை) யைப் பற்றி உங்கள் கருத்து என்ன? இந்தப் பிரிவின் வளர்ச்சி பாராட்டுக்குரியது அல்லவா?**

ஒரு உறுப்பில் நோயின் விளைவுகள் ஏற்பட ஆரம்பிக்கின்றன. நோய் இன்னதென்று புரியாத நிலையில் நோயின் விளைவுகள் தீவிரமடைந்து அவ்வுறுப்பை நாளடைவில் சேதப்படுத்துகிறது. இந்த நிலையில் தான் பரிசோதனைக் கருவிகளும், டெஸ்ட்டுகளும் சேதமடைந்த பகுதிகளை நமக்குப் படம் பிடித்து காட்டுகின்றன. இப்போது சேதமடைந்துவிட்ட பகுதியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விடுகிறார்கள்.

ஒரு உறுப்பில் ஏற்பட்டுள நோயை நீக்க டாக்டரிடம் சென்றால் அந்த உறுப்பையே அகற்றி விடுவார்கள்.

உதாரணமாக :

ஒரு சிறுவனுக்கு தொண்டையில் சளியும், ‘ டான்ஸில்ஸ் ’ வலியும் ஏற்படுகிறது. ‘டான்ஸில்’ லை நீக்கி விடலாம் என்கிறார்கள்.

முழங்காலில் வலி என்று போனால் பல வருடங்கள் சிகிச்சை பார்த்த பிறகு உங்களுக்கு மூட்டு தேய்ந்து விட்டது. அந்த மூட்டை ‘ நீக்கி வேறு மூட்டு பொறுத்த வேண்டும் ’ என்று கூறிவிடுகிறார்கள். சாதாரண வாய்வுத் தொல்லையைக் கூட குணப்படுத்த முடிவதில்லை. வயிற்றில் புண்ணாக (Ulcer) மாறிய பிறகு வெட்டியயடுத்து விடுகிறார்கள்.

(Apendix) ‘அப்பெண்டிஸைட்டிஸ் ’ என்பது எல்லோருக்கும் தெரிந்தது ஒன்று. அது திடீரென ஏற்படுவதில்லை. பல வருடங்கள் லேசான வலி அடிவயிற்றில் வந்து வந்து போகும். அது முற்றிய பிறகு “ எமர்ஜன்ஸி ஆபரேசன் ” செய்து விடுகிறார்கள். பெண்களுக்கு கர்ப்பப்பைக் கோளாற்றை சீர் செய்ய வழி தெரியாமல் கர்ப்பப்பையையே ஆபரேசன் மூலமாக அகற்றி விடுகிறார்கள்.

இவ்வளவுக்கும் பிறகு நோயைக் குணப்படுத்தி விட்டோம் என்று கூறுகிறார்கள். ஒரு உறுப்பையே உடலைவிட்டு நீக்கிய பிறகு, உறுப்பிலுள்ள நோயைக் குணமாக்கி விட்டோம். (“ நோயாளியை குணப்படுத்தி விட்டோம் ”) என்ற பேச்சுக்கே இடமில்லை. மாறாக, நோயின் தீவிரம் உடலிலேயே தங்கி விடுகிறது. இன்னும் உடலிலுள்ள பிற உறுப்புக்களையும் வெகுவேகமாக பாதிக்க ஆரம்பிக்கிறது.

ஒரு உறுப்பு பழுதடைந்து விட்டால் வேறொருவருடைய உறுப்பை மாற்றி சிகிச்சை (Organ Transplant) அளிக்கிறார்களே?

நோயின் காரணமாக ஏற்படும் விளைவுதான் ஒரு உறுப்பில் ஏற்படும் சேதம். அந்த உறுப்பை நீக்குவதென்பது நோயின் ஒரு விளைவை நீக்குவதாகத்தான் பொருள்!

நோயின் தன்மை உடலினுள் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதைச் சீர் செய்யாத வரையில் எத்தனை முறை உறுப்பு மாற்றம்

செய்தாலும் அவையும் பழுதடையத்தான் செய்யும். இதற்கு சரியான உதாரணமாக இருப்பது இப்போது நடந்து வரும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தான் (அதிகமான சிறுநீரகங்கள் தொடர்ந்து பழுதடைவதால் தான் சிறுநீரகங்களை களவாடும் அளவிற்கு தேவை அதிகரித்துள்ளது)

எத்தனை மாற்று சிறுநீரகங்களைப் பொருத்தினாலும் ஒரு இயற்கையான சிறுநீரகத்திற்கு ஒப்பாகாது.

- **அக்குபங்சர் சிகிச்சைமுறையில் Diagnosis என்பதற்கு விளக்கம் உண்டா?**

அக்குபங்சர் சிகிச்சை முறையில் B.P. இருக்கிறது, சுகர் தொந்தரவு உள்ளது. தைராய்டு கஷ்டங்கள் இருக்கின்றன என்பன அர்த்தமற்றவையாகும். இந்த ஆங்கிலமுறை Diagnosis க்கு எந்த மதிப்பும் கிடையாது. ஆனால் B.P. உள்ளவர் தன் உடலில் உள்ள உபாதைகளைக் கூறுவதன் மூலம், சர்க்கரை நோய் உள்ளவர் தன் கஷ்டங்க கூறுவதன்

மூலம், தைராய்டு தொந்தரவு உள்ளவர்கள் தன் உடலில் உள்ள நோய்களைக் கூறுவதன் மூலம் நாடிப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு நோய்க் கூறுகளின் தன்மையையும் இணைத்து சிகிச்சை செய்வதன் மூலம் Diagnosis என்ற ஒன்றே தேவையில்லாமல் செய்து விடலாம். எல்லா B.P. யும் ஒரே மாதிரி இல்லை. ஒவ்வொரு நோயையையும் ஒவ்வொரு கோணங்களில் அவரவர் நாடித்துடிப்பிற்கு ஏற்றவாறு சிகிச்சை செய்தாக வேண்டும்.

நாளடைவில் நோயாளிகள் ஆங்கிலப் பரிசோதனைகள் Diagnosis எல்லாம் தேவையற்ற பெயர்கள் என்பதைப் புரிந்து கொள்வார்கள். சிகிச்சை மேற்கொள்ளும் மாத்திரையின் அளவும் படிப்படியாக குறைக்கப்பட்டு, நோய்களின் கஷ்டங்கள் இயற்கையாக குறையும் போது B.P. சுகர், தைராய்டு போன்ற நோய்களும் உடலிலிருந்து படிப்படியாக வெளியேறுகின்றன. இவ்வாறு நோயாளிகள் கூறும் தொந்தரவுகளும்,

உபாதைகளும் மட்டுமே *Diagnosis* ஆகக் கருதப்படுகிறது.

- **மூட்டுவலியால் நிறையப் பேர் அவதிப்படுகிறார்கள். ஆங்கில மருத்துவப் பரிசோதனைகள் மூட்டு தேய்ந்து விட்டதாகக் கூறுகிறது. இந்நிலையில் அக்குபங்சர் இந்த நோயைத் தீர்க்க முடியுமா?**

கண்டிப்பாக மூட்டுக்கள் தேய்வதில்லை. மூட்டுக்களை இணைக்கக்கூடிய தசைநார்களின் சக்திநிலையும் இயக்கக் குறைபாடுமே மூட்டுவலிகளுக்கு காரணமாக இருக்கின்றது. அக்குபங்சர் சிகிச்சையால் பலம் இழந்த மூட்டு தசைநார்கள் தன் சக்தியை திரும்பவும் பெறுவதன் மூலம் முழுமையாக குணமாக்கப்படுகின்றது.

- **கல்லீரல், சினைப்பை, கருப்பை, கணையம் பகுதிகளில் கட்டிகள் மற்றும் கேன்சர் வருவது ஏன் ? அக்குபங்சரில் குணமாகுமா ?**

உடலில் உருவாகும் கழிவுகள் கெட்ட வாயுவாகவும், கெட்ட நீராகவும் தேங்குகின்றன. கழிவுகள் சேரும் உறுப்பைப் பொறுத்து அவை உருமாற்றம் பெறுகின்றன. குழகுழப்பான நீர்க்கட்டிகள், மெதுவான சதைக்கட்டிகள், கெட்டியான தசைக் கட்டிகளாக மாறுகின்றன. இந்த கட்டிகளில் வெப்பம் தேக்கமடைகிறது. சுற்றுப் பெறாத இந்த வெப்பம் செல் அணுக்களையும், திசுக்களையும் அளவுக்கு மீறி வளர வைக்கிறது.

இக்கட்டிகள் வளர்ந்து, வெடித்து பரவும் நிலை ஏற்படும் பொழுது கான்சர் கட்டிகளாக மாறுகிறது. கட்டிகளை கரைக்க இரசாயன மருந்துகளை உட்கொள்வதோ, கதிர்வீச்சைச் செலுத்துவதோ, அறுவை சிகிச்சை மேற்கொள்வதோ அவற்றை மேலும் மோசமாக்கும் - விரைவாக பரவ வழி வகுக்கும். இக்கட்டிகள் அகல வேண்டும் என்றால் இந்த கெட்ட வெப்ப சக்தி சுற்றுப் பெற்று கட்டிகள் உடைந்து மறைய வேண்டும். அக்குபங்சர் சிகிச்சையை

மேற்கொள்வதன் மூலம் இக்கட்டிகள் முழுவதும் அகற்ற முடியும்.

- **அக்குபங்சர் சிகிச்சை மேற்கொண்ட பிறகு உடல்நிலையில் ஏற்படும் முன்னேற்றத்தை கணிப்பது என்பது எவ்வாறு?**

உதாரணத்திற்கு ஒருவர் பத்துவிதமான உடல் தொந்தரவால் சிகிச்சை எடுத்துக் கொள்கிறார் என வைத்துக் கொள்வோம். ஒவ்வொருமுறையும் சிகிச்சை செய்யும் பொழுதும் சில கஷ்டங்கள் குறையாமல் இருக்கலாம். ஒரு சிலருக்கு சில நாட்கள் குறைந்து சில நாட்கள் கழித்து மீண்டும் ஆரம்பிக்கலாம். இதனால் நோய்கள் திரும்பிவிட்டன என அர்த்தம் கிடையாது. தொடர்ந்து சிகிச்சை அளிக்க அவைகள் நல்ல முறையில் நிரந்தரமாக மறையத் தொடங்கும். திரும்பத் திரும்ப வருதவதன் மூலம் நாடியின் மாறுதலுக்கு ஏற்ப அந்த நோய்களை நல்லமுறையில் வேருடன் களைய முடியும்.

அப்படியானால் முத்தடுப்பு ஊசி, போலியோ, டிஃப்தீரியா, டெட்டனஸ் ***(Polic, Diphteria, Tetanus)*** போன்ற வியாதிகளுக்குச் சொட்டு மருந்து போடுகிறார்களே அது இளம்பிள்ளை வாதம், தொண்டையடைப்பான் நோய் போன்றவை வராமல் நம்மைக் காப்பாற்றத்தானே செய்கிறது?

தடுப்பு ஊசிகள் நிச்சயமாக நோய் எதிர்ப்பு சக்தியை வளர்ப்பதில்லை, மாறாக நோய் எதிர்ப்பு சக்திகளைப் பலவீனப்படுத்தி விடுகின்றது. மேற்கண்ட தடுப்பு ஊசிகளை போட்டுக் கொண்ட பிறகும் நோய்கள் தாக்குவதை நாம் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்? தடுப்பு ஊசிகள் போட்டுக் கொள்வதால் நிச்சயமாக அந்நோய்கள் வராது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை.

தடுப்பு ஊசிகள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் இருந்தே அதற்கு எதிராக ஆராய்ச்சியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். போலியோ, டிப்தீரியா,

டைபாய்டு, மஞ்சள் காமாலை, அம்மை போன்ற நோய்கள் எதனால் ஏற்படுகிறது என்பதை ஆங்கில மருத்துவர்கள் இன்னும் கண்டறியவில்லை. போலியோ மருந்துகளில் பலவகைகள் உள்ளது. இந்தியாவில் கொடுக்கப்படும் மருந்துகளை அமெரிக்க ஆங்கில மருத்துவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இது போன்ற குழப்பங்கள் மருத்துவ விஞ்ஞானிகளுக்கு மத்தியிலேயே அதிகமாக காணப்படுகின்றது. குழப்பங்கள் தெளிவடையாத நிலையிலும் அம்மருந்துகளை தயக்கமின்றி இன்னும் பயன்படுத்துவது அறிவின்மையே.

- **அக்குபங்சர் சிகிச்சையின் அணுகுமுறை எந்த விதத்தில் ஆங்கில மருத்துவத்தில் இருந்து வேறுபடுகிறது?**

ஒரு நோயாளிக்கு ஏற்படும் தொந்தரவு நோயின் அறிகுறியாகும். இந்த அறிகுறியையே நவீன மருத்துவம் நோயாக கருதி சிகிச்சை அளிக்கிறது. ஆனால் அக்குபங்சர் சிகிச்சை

நோயின் மூல காரணத்தை கண்டறிந்து சீராக்குவதன் மூலம் நோயையும் - அதன் அறிகுறிகளையும் வேரோடு களைகிறது.

உதாரணத்திற்கு ஒருவருக்கு தலைவலி ஏற்படுகிறது. இதற்கு ஆங்கில மருத்துவம் முதலில் வலி நிவாரணிகளை கொடுத்துப் பார்க்கிறது. சரியாக போது தலையை ஸ்கேன் செய்து, பரிசோதித்து தலைவலி என்னும் அறிகுறியின் காரணத்தை தலையிலேயே தேடிக் கொண்டிருக்கிறது.

ஆனால் உண்மை நிலை என்ன? தலைவலி ஏற்படுவதற்கு தலை காரணம் அல்ல. மண்ணீரல் அல்லது இரைப்பை கோளாறுகளால் தலைவலி ஏற்படலாம். கல்லீரல், பித்தப்பை தொந்தரவுகளால் தலைவலி ஏற்படலாம். இதயம், இதயமேலுறையால் வெப்பம் சீரற்று கடத்தப்படும் போது தலைவலி ஏற்படலாம். சிறுநீரகம், சிறுநீர்ப் பையின் இயக்க குறைவால் தலைவலி ஏற்படலாம். நுரையீரலில் கழிவு

தேங்கும் போது தலைவலி ஏற்படலாம். இன்னும் சொல்வதானால் தூக்கம் குறைவதாலும், மலம் கழிக்காவிட்டாலும், அதிகப்பசியின் போது உணவறிந்தாவிட்டாலும், பசிக்கு மீறிய உணவை உண்டாலும் தலைவலி ஏற்படலாம்.

மேற்கண்ட ஏதோ ஒரு காரணத்தால் தோன்றுகின்ற தலைவலியை - தலையை பரிசோதிப்பதன் மூலம் அறியவோ, நீக்கவோ முடியாது. உடலின் உள்ளுறுப்புக்களில் தேக்கம் கொள்கிற கழிவுகள், உடலின் வெளிப்புறத்தில் சில மாறுதல்களை ஏற்படுத்துகிறது. இந்த மாறுதல்கள் வெறும் அறிகுறிகளே. இதில் ஒன்றிரண்டு அறிகுறிகளை நீக்குவதன் மூலம் நோய் எக்காலத்திலும் குணமாகாது.

ஆங்கில மருத்துவம் நோய்க்கான காரணங்களை உடலிற்கு வெளியே தேடுகிறது. அக்குபங்சர் உடலிற்கு உள்ளேயே தேடி, தீர்வு காண்கிறது.

- **அக்குபங்சர் சிகிச்சை மூலம் நோய்களைக் களைந்து விட்டோம் சரி; வருமுன் காப்பது எவ்வாறு?**

நமது உணவு உண்ணும் முறையை சரிசெய்து கொள்ள வேண்டும். அதாவது உணவினால் நோயில்லை உணவை உண்ணும் முறையில் தான் நோய் வருகிறது. எப்படி என்றால் பசிக்கும் பொழுது மட்டும் உணவு உண்ண வேண்டும். வயிறு நிறைந்து விட்ட உணர்வு வந்த உடன் உண்ணுவதை நிறுத்தி விடவேண்டும். தேவைக்கு அதிகமாக வயிறு புடைக்க உணவை எடுத்துக் கொள்ளக் கூடாது. இரவு உணவு மிகவும் குறைவான உணவாகவும் மிக எளிதில் ஜீரணமாகக் கூடியதாகவும் இருக்க வேண்டும். “பசித்துப் புசி” , “அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு” போன்ற முதுமொழிகள் வருமுன் காக்கும் முறையை மிகவும் எளிமையாக நமக்கு போதிக்கின்றது.

- **இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த சிகிச்சை முறை ஏன் இன்னும் பிரபலமாகவில்லை?**

அக்குபங்சர் டாக்டர்களின் திறமைக் குறைவுதான் இதற்குக் காரணம்.

அக்குபங்சரின் தந்தை டாக்டர். உ வே பிங் கூறுகிறார் “ஒரே ஒரு ஊசியைக் கொண்டு 10,000 உடல் குறைபாடுகளை நீக்க முடியும்” . அக்குபங்சர் சிகிச்சை முறையில் இதற்கான சாத்தியக்கூறுகள் முழுமையாக இருக்கிறது.

அக்குபங்சரை முழுமையாக உணராத மருத்துவர்கள் இந்த சிகிச்சை முறையில் புதிய குழப்பங்களை ஏற்படுத்துகிறார்கள். தாங்களும் குழம்பிக் கொள்கிறார்கள். பல ஊசிகளையும், மின்சார கருவிகளையும், துணை உணவுகளையும் சிகிச்சை என்ற பெயரில் நோயாளிக்கு கொடுத்து அக்குபங்சரின் மருந்தில்லா மருத்துவம் என்ற பெயருக்கு களங்கம் விளைவிக்கின்றனர்.

அக்குபங்சரில் உள்ள சாத்தியக்கூறுகளில் ஒரு சதவிகிதம் எட்டிவிட்டாலும் போதும் உலகம் முழுமையிலும் பிரபலமாகிவிடும். இந்த முயற்சியில் தான் நாங்கள் எங்கள் நேரத்தை அர்ப்பணித்து வருகிறோம்.

நோய்களிலிருந்து உலகையும், மருந்துகளிலிருந்து மனிதர்களையும் காப்போம்.

- **ஆங்கில மருத்துவத்தில் ஒரு நோய்க்கும் சிகிச்சையும் இல்லை, தீர்வும் இல்லை என்றால் அரசாங்கம் ஏன் கண்டு கொள்ளாமல் இருக்கிறது?**

இந்திய அரசு மட்டுமல்ல உலக சுகாதார நிறுவனமும் இதை அறிவித்திருக்கிறது. மூல காரணம் தெரியாத எந்த ஒரு நோயையுமே சிகிச்சைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதன் அடிப்படையில் கீழ்க்கண்ட சட்டம் இந்திய அரசால் இயற்றப்பட்டு இன்று வரை நடப்பில் உள்ளது. மக்கள் பார்வையில் இருந்து

மறைக்கப்பட்ட பல்வேறு உண்மைகளில் இதுவும் ஒன்று.

இதோ அந்தச் சட்டம் :

“ Drugs and Cosmetics Act 1940, Drugs and Cosmetics Rule 1945, and Drug prices control order 1995, in its Schedule - J warns the medical practitioners thus; Here is a list of 51 Diseases and ailments ( by what ever name described ) which a drug may not purport to prevent or cure or make claints to prevent or cure. ”

மருந்துகள் மற்றும் அழகு சாதனங்கள் சட்டம் 1940, 1945 மற்றும் மருந்துகள் விலை கட்டுப்பாட்டு ஆணைகள் 1995 அட்டவணை “ ஷெட்யூல் - J ” வை வெளியிட்டுள்ளது. ஆங்கில மருத்துவத்தொழில் பார்க்கும் எந்த ஒரு டாக்டரும் “ ஷெட்யூல் - J ” யில் பட்டியலிடப்பட்டுள்ள 51 நோய்களில் எந்தவொரு நோயையும் தங்கள் மருந்துளைக் கொண்டு குணப்படுத்துவோம் என்றோ அல்லது குணப்படுத்தி இருக்கிறோம் என்றோ இந்த 51 நோய்களையும் தடுத்து விடுவோம் என்றோ

அல்லது தடுத்திருக்கிறோம் என்றோ கூறுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

1. எய்ட்ஸ்
2. நெஞ்சுவலி
3. அப்பன்டிசைட்டிஸ் எனும் குடல்வால் நோய்
4. இருதய இரத்தக் குழாய்களில் அடைப்பு
5. தலைவழுக்கை
6. கண்பார்வையற்ற நிலை
7. ஆஸ்த்துமா
8. உடலில் தோன்றும் கட்டிகள் முதல் புற்றுநோய் வரை
9. கண்புரை
10. தலைமுடி வளர, நரையை அகற்ற

11. கருவில் வள்ரும் குழந்தையை ஆணாகவோ, பெண்ணாகவோ மாற்றுவோம் என்று கூறுவது.
12. பிறவிக் கோளாறுகள்
13. காது கேளாமை
14. நீரிழிவு நோய்
15. கர்ப்பப்பை சம்பந்தமான அனைத்து நோய்கள்
16. வலிப்பு நோய், மனநோய்கள் அனைத்தும்
17. மூளைக் காய்ச்சல்
18. உடல் நிறம் கருப்பாக இருப்பினும் சிவப்பாக்குதல்
19. மார்பக வளர்ச்சிக்கு
20. புரையோடிய புண்
21. மரபணு நோய்கள்
22. குளுகோமா எனும் கண்வலி நோய்

23. கழுத்து வீக்கம் (தைராய்டு)

24. யஹற்ர்னியா எனும் குடலிறக்க நோய்

25. அதிக மற்றும் குறை இரத்த அழுத்தம்.

26. விரை வீக்கம்.

27. பைத்தியம்

28. ஞாபக மறதி. ஞாபக சக்தியை அபிவிருத்தி செய்ய

29. குழந்தையின் உயரத்தை கூட்ட

30. சாதாரணமாக ஏற்படும் கண்பார்வைக் குறைபாடுகள், கிட்டப்பார்வை, தூரப்பார்வை

31. ஆணுறுப்பு வளர்ச்சி, வீரியம்

32. பற்களை உறுதிப்படுத்த என்று கால்சியம் மருந்துகள் மூலமாக சிகிச்சையளிப்பது.

33. மஞ்சள் காமாலை, கல்லீரல் மர்ம நோய் *(Hepatitis)* மற்றும் கல்லீரல் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களும்.

34. இரத்தப்புற்று நோய்.

35. வெண்குஷ்டம்

36. உடலுறவில் வீரியம் அதிகப்படுத்துதல்

37. மூளை வள்ர்ச்சி குறைவு

38. மாரடைப்பு நோய்.

39. குண்டான உடம்பு மெலிய

40. பக்கவாதம்

41. உடம்பு முழுவதும் நரம்பு நடுக்க நோய்

42. மூலம் மற்றும் பவித்ரம்

43. வாலிப சக்தியை மீட்க

44. குறைந்த வயதில் முதிர்ச்சி அடைந்த தோற்றம்

45. இளநரை

46. ருமாட்டிக் இருதய நோய்

47. ஆண்மைக் குறைவு விரைவில் ஸ்கலிதம்

48. கழுத்து வலி மற்றும் முதுகுத்தண்டில் ஏற்படும் அனைத்து வலிகளும்

49. திக்குவாய்

50. சிறுநீரகக் கற்கள், பித்தப்பை கற்கள், சிறுநீர்ப்பை கற்கள்

51. காலில் இரத்த நாளங்கள் வீக்கமடைந்து புடைத்து காணப்படுதல்.

# அக்குபங்சர் இல்லம்®

## தமிழ்நாடு

| | | |
|---|---|---|
| 1. கம்பம் | தேவாங்கர் தெரு, காந்தி சிலை மேற்புரம் | 9994020355 |
| 2. போடி | 65 B, R.I. ஆபீஸ் ரோடு | 9363328741 |
| 3. கோவை | 3, முத்துக்காம்ப்ளக்ஸ், சாரமேடு, கரும்புக்கடை | 9894655750 |
| 4. மதுரை | 59, முதல் கிழக்கு குறுக்குத்தெரு, அண்ணாநகர் | 9345213425 |
| 5. கோம்பை | நாகர் சாவடித் தெரு, மெயின் ரோடு | 9842566053 |
| 6. தேனி | 1, G.H. ரோடு, கான்வெண்ட் பஸ் ஸ்டாப் | 9994955109 |
| 7. நிலக்கோட்டை | மதுரை மெயின் ரோடு | 9842566053 |
| 8. கம்பம் | 90, காந்திஜி வீதி, விஜய் லேப் எதிர்புறம் | 9360379504 |
| 9. தேனி | A.B.M. காம்ப்ளக்ஸ், சுப்பன் தெரு, பஸ்ஸ்டாண்ட் அருகில் | 9486163726 |
| 10. ராமநாதபுரம் | 71, வைசியாள் தெரு | 9843669766 |
| 11. ராமநாதபுரம் | வைசியாள் தெரு | 9865366633 |
| 12. கோவை | 155, காந்தி பார்க், R.S.புரம் | 9894655750 |
| 13. சின்னமனூர் | அண்ணா நடுநிலைப் பள்ளி அருகில், வ.உ.சி.நகர் | 9442022281 |
| 14. சேலம் | 50/63, குலசேகர ஆழ்வார் தெரு, சித்தேஸ்வரா பஸ் ஸ்டாப் | 9942195195 |
| 15. திருத்தங்கல் | S.N.புரம் ரோடு | 9944965345 |
| 16. வத்தலக்குண்டு | காந்தி நகர் மெயின் ரோடு, பஸ் ஸ்டாண்ட் பின்புறம் | 9952159005 |
| 17. சீலையம்பட்டி | மெயின் ரோடு | 9994967515 |
| 18. மேட்டூர் | கணபதி இல்லம், டெம்ப்ளாஸ்ட் 2nd Plant எதிரில், இராமன் நகர் | 9842745407 |
| 19. ஆண்டிபட்டி | 116, வேல்மணி காம்ப்ளக்ஸ், M.G.R. சிலை அருகில் | 9262412541 |
| 20. ஆண்டிபட்டி | மகளிர் காவல் நிலையம் அருகில், மெயின் ரோடு | 9842353769 |
| 21. தேனி | ஸ்ரீ வெங்கல்லா டவர்ஸ், T.K. விஜயராம் தெரு, மதுரை ரோடு | 9842083940 |
| 22. கோவை | 30, பேரநாயுடு தெரு, பீளமேடு | 9994230009 |
| 23. மேட்டுப்பாளையம் | குபேர கணபதி கோவில் தெரு, K.K. நகர், மீனாட்சி பஸ்ஸ்டாப் | 9786818380 |
| 24. முசிறி | அங்காளம்மன் கோவில் எதிரில், சேலம் மெயின் ரோடு | 9443393025 |
| 25. திருவாடனை | திருவாடனை ரோடு, C.K.மங்கலம் | 9788507022 |
| 26. திருவானைக்கோவில் | ஸ்ரீ ரங்கம் ரோடு | 9894414677 |
| 27. பெரம்பலூர் | பூசாரி தெரு, பழைய பஸ் ஸ்டாண்ட் அருகில் | 9842745407 |
| 28. கோவை | C.159, சேரன் காலனி, துடியலூர் | 9944400422 |
| 29. நாமக்கல் | 16/2, திருமலைச்சாமி தெரு | 9994420714 |
| 30. சென்னை | 51/6, ஈஸ்வரன் கோவில் தெரு, மேற்கு மாம்பலம் | 9942195195 |
| 31. போடி | 11, பெரியாண்டவர்புரம் நடுத்தெரு,பொன்னுசினிமா எதிரில் | 9442022281 |
| 32. திருமங்கலம் | 61, ராஜாஜி 9வது தெரு | 9994955109 |
| 33. திருநெல்வேலி | A 103, ஜெபா கார்டன், N.G.O. A - காலனி | 9363328741 |

# ACUPUNCTURE HOME®

## IN TAMILNADU

| | | |
|---|---|---|
| 1.CUMBUM | Devangar Street, Gandhi Statue west side | 9994020355 |
| 2. BODI | 65B, R.I. Office Road | 9363328741 |
| 3. COIMBATORE | 3, Muthu Complex, Saramedu, Karumbukadai | 9894655750 |
| 4. MADURAI | 59, 1st East Cross Street, Annanagar | 9345213425 |
| 5. KOMBAI | Nagar Chavadi Street, Main Road | 9842566053 |
| 6. THENI | 1, G.H. Road, Convent Bus Stop | 9994955109 |
| 7. NILAKOTTAI | Madurai Main Road | 9842566053 |
| 8. CUMBUM | 90, Gandhiji Veethi, Vijay Lab opposite | 9360379504 |
| 9. THENI | A.B.M. Complex, Subban Street, Bus Stand Near | 9486163726 |
| 10. RAMANATHAPURAM | 71, Vysiyal Street | 9843669766 |
| 11.RAMANATHAPURAM | Vysiyal Street | 9865366633 |
| 12. COIMBATORE | 155, Gandhi Park, R.S. Puram | 9894655750 |
| 13. CHINNAMANUR | Anna Middile School Near, V.O.C. Nagar | 9442022281 |
| 14. SALEM | 50/63, Gulasekara Alwar Street, Sidheswara Bus Stop | 9942195195 |
| 15. THIRUTHANGAL | S.N. Puram Road | 9944965345 |
| 16. BATLAGUNDU | Gandhi Nagar Main Road, Bus Stand Back side | 9952159005 |
| 17. SEELAYAMPATTI | Main Road | 9994967515 |
| 18. METTUR | Ganapathi Illam, Tembplast 2nd Plant (Opp.) | 9842745407 |
| 19. AUNDIPATTI | 116, Velmani Complex, M.G.R. Statue Near | 9262412541 |
| 20. AUNDIPATTI | Women's Police Station Near, Main Road | 9842353769 |
| 21. THENI | Sri Vengala Towers, T.K. Vijayaram Street, Madurai Road | 9842083940 |
| 22. COIMBATORE | 30, Peranaidu Street, Peelamedu | 9994230009 |
| 23. METTUPALAYAM | Gupera Ganapathi Kovil Street, K.K.Nagar, Meenatchi Bus Stop | 9786818380 |
| 24. MUSIRI | Angalamman Kovil (Opp.), Salem Main Road | 9443393025 |
| 25. DEVAKOTTAI | ThiruVaadanai Road, C.K. Mangalam | 9788507022 |
| 26. THIRUVANAIKOVIL | Sri Rengam Road | 9894414677 |
| 27. PERAMBALUR | Poojari Street, Old Bus Stand Near | 9842745407 |
| 28. COIMBATORE | C. 159, Cheran Colony, Dudiyalur | 9944400422 |
| 29. NAMAKKAL | 16/2, Thirumalaisamy Street | 9994420714 |
| 30. CHENNAI | 51/6, Easwaran Kovil Street, West Mambalam | 9942195195 |
| 31. BODI | 11, Periyandavarpuram Middile Street, Ponnu Cinema opp. | 9442022281 |
| 32. THIRUMANGALAM | 61, Rajaji 9th Street | 9994955109 |
| 33. THIRUNELVELI | A 103, Jeba Garden, N.G.O. A-Colony | 9363328741 |

# இந்திய அக்குபங்சர் பயிற்சி

## B.ACU & M.ACU

**BASIC & MASTER CERTIFICATION IN ACUPUNCTURE**

காலம் : 2 ஆண்டுகள்

தகுதி : +2 / Any degree

பயிற்சி : மாத இறுதி வகுப்புகள்

பயிற்சி மொழி : தமிழ்

தொடர்புக்கு :

**அகாடமி ஆஃப் அக்குபங்சர்**

**கம்பம் & கோவை**

Registered by : Govt of Tamilnadu
Approved by : BSS (NDA) - Govt of India
33 A, கிராமச் சாவடித் தெரு,
கம்பம் - 625 516.

செல் : 94880 11505, 92624 12541

குறிப்புகளுக்காக..